

எ
e
1
2
எண்ணும்
எழுத்தும்




# எண்ணும் எழுத்தும் – தமிழ்

## வகுப்பு 1 – 3

### முதல் பருவம்

### 2024-25



# அமர்வு 1

10.15 – 11.30



# ஆர்வமூட்டல் – விடை சொல்லி விளையாடுவோம்!

◆ ஒவ்வொரு குழுவிலிருந்தும் குழுவின் பிரதிநிதியாக ஒருவரை முன்வரச் செய்யுங்கள்.

◆ அவர்களை அருகருகில் வரிசையாக நிற்கச் செய்யுங்கள்.

◆ ஒவ்வொருவரின் முன்பும் மூன்று கட்டங்களை வரையுங்கள்.

◆ ஒவ்வொரு குழுவினருக்கும் விடைசொல்லி விளையாடு செயல்தாளை அளியுங்கள். அதில் மூன்று பகுதியில் குறிப்புகள் இருக்கும்.

◆ தொடங்குங்கள் என்றவுடன் குழுவினர் ஒன்றுசேர்ந்து விடைகளைக் கண்டறிய வேண்டும்.

◆ முதல் பகுதிக்கான விடையைக் கண்டுபிடித்து எழுதியவுடன் தங்கள் குழுவின் பிரதிநிதியை முதல் கட்டத்தில் நிற்கச் சொல்லவேண்டும்.

◆ இவ்வாறு அடுத்தடுத்த பகுதிக்கான விடைகளைக் கண்டறிந்தவுடன் அடுத்தடுத்த கட்டத்திற்கு நகரவேண்டும்.

◆ முதலில் மூன்றாம் கட்டத்திற்கு வந்தவரின் குழுவே வெற்றிபெற்ற குழுவாகும்.

## விடை சொல்லி விளையாடுவோம்! (ஆர்வமூட்டல்)

### (1) இரண்டுமே ஒரே எழுத்து

1. ____ ந் ____ ம்
2. ____ ர் ____ லம்
3. ம ____ ன ____
4. ____ ட ____
5. ____ ர ____ ம்

### (2) சொல்லாக்குக

1. ள் து க கு ணு க்

____________________

2. டை ம் ப கா ண் க் ல

____________________

3. ரை ங் க க் வி க ல க ள ம்

____________________


4. ள் ல செ ர் த ங் ம ந் கா

____________________

5. ல் பா ப் க ய் ர ப க் ம

____________________

### (3) படம் இது! ஊர் எது?




+ = ____________________

+ = ____________________


+ = ____________________

+ = ____________________

+ = ____________________

# 2023-24இல் நிகழ்த்தப்பட்ட அடிப்படைத் திறனறி மதிப்பீடு

- நடத்தப்பட்ட மாதம் – செப்டம்பர் 2023
- திறனறி மதிப்பீடு நடத்தப்பட்ட வகுப்புகள் – 1, 2, 3
- அடிப்படைத் திறனறி மதிப்பீடு நடத்தப்பட்ட மாவட்டங்கள் – 38
- நடைபெற்ற பள்ளிகள் – 4800
- ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை – 61,500




slidesmania.com


# எண்ணும் எழுத்தும் திறனறி மதிப்பீடு


## வகுப்பு 2இன் தமிழ்மொழித்திறன்களில் பெறப்பட்ட விவரங்கள்


| | |
|---|---|
| கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | 90% |
| வாய்மொழி சொற்களஞ்சியம் - | 99% |
| முதல் எழுத்தை/ ஒலியை அடையாளம் காணுதல் | 96% |
| எழுத்தைத் துல்லியமாக ஒலித்தல் | 83% |
| எழுத்தை விரைவாக ஒலித்தல் | 32% |
| தெரிந்த சொற்களைச் சரியாகப் படித்தல் | 66% |
| தெரிந்த சொற்களை விரைவாகப் படித்தல் | 20% |
| பொருளற்ற சொற்களை விரைவாகப் படித்தல் | 30% |
| வேகமாக வாய்விட்டுப் படித்தல் | 16% |
| படித்துப் பொருளுணர்தல் | 49% |
| சொல்லக்கேட்டு எழுதுதல் - எழுத்துகள் | 82% |
| சொற்கள் | 40% |
| தொடர்கள் | 70% |

slidesmania.com

# குழந்தைகள் சிறந்து விளங்கும் திறன்கள்



















Level 1 – வகுப்புநிலைக்குக் குறைவாக உள்ள குழந்தைகளின் விழுக்காடு


Level 2 – வகுப்புநிலையில் உள்ள குழந்தைகளின் விழுக்காடு


slidesmania.com

# குழந்தைகளிடம் மேம்பட வேண்டிய திறன்கள்









slidesmania.com

# எண்ணும் எழுத்தும் மூன்றாம் ஆண்டில்...

திறனறி மதிப்பீட்டின் அடைப்படையில் கேட்டல், பேசுதல் திறன்களில் குழந்தைகளிடம் பெருமளவு முன்னேற்றம் கண்டறியப்பட்டுள்ளது. இத்திறன்களை வலுப்படுத்த கலந்துரையாடல், குறிப்பிட்ட ஒன்றைக் குறித்துப் பேசுதல், கற்பனை செய்து பேசுதல் போன்றவாறு பயிற்சிகள் வரும் கல்வியாண்டிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன.





# எண்ணும் எழுத்தும் மூன்றாம் ஆண்டில்...

திறனறி மதிப்பீட்டின் அடிப்படையில் எழுத்துகளை இணைத்துப் பொருளற்ற, எழுத்துக்கோவையைப் படித்தல், தெரிந்த எழுத்துகள், சொற்கள், தொடர்களைப் படித்தலுக்கான பயிற்சிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.












## எண்ணும் எழுத்தும் மூன்றாம் ஆண்டில்...

குறிப்பாக, திறனறி மதிப்பீட்டின் அடிப்படையில் தெரிந்த சொற்களை விரைவாகப் படிப்பதிலும் வாய்விட்டுப் படிப்பதிலும் குழந்தைகளிடம் முன்னேற்றம் தேவை என்பதற்கேற்ப


கூடுதலாகச் செயல்பாடுகள், பயிற்சிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.















# எண்ணும் எழுத்தும் குழந்தைகள்...




அடிப்படை மொழித்திறனைப் பெறுவதில் தொடங்கி படைப்பாளராக உருவாகியுள்ளனர்.

# எண்ணும் எழுத்தும் குழந்தைகள்








**மொழிப்பாடம் மூலம் குழந்தைகள்,**

- அடிப்படைத் திறன்களைப் பெறுகிறார்கள்.
- சிந்தனையாளர்களாக மாறுகிறார்கள்.
- படைப்பாளர்களாக உருவாகிறார்கள்.
- பன்முக அறிவைச் சேகரிக்கிறார்கள்.











**பாடலாம்; படிக்கலாம்; மகிழலாம்**

சின்னச் சின்னத் தக்காளி
சிவப்பு வண்ணத் தக்காளி
குச்சி போன்ற கால்களால்
குதித்துக் குதித்துப் போனதாம்
தட்டின் மேலே ஏறிநின்று
குட்டிக் கரணம் போட்டதாம்





## குழந்தைகள் கேட்பவராக... பேசுபவராக...

- பாடலைக் கேட்டுப் பாடுவதிலிருந்து தானே உருவாக்கிப் பாடுபவராக
- கதையைக் கேட்டுக் கூறுவதிலிருந்து தானே உருவாக்கிக் கூறுபவராக
- உரையாடலில் பங்குபெறுவதிலிருந்து தன் கருத்தை நிலைநாட்டுபவராக
- மேடையில் தன் மொழியில் பேசுவதிலிருந்து ஒரு மேடைப் பேச்சாளராக

**உருவாகி ஒளிர்கிறார்கள்.**





### 1.2 கலந்துரையாடல்

- மரத்துடன் நண்பர் ஆக முடியுமா?
- வெளியில் சென்று விளையாட வேண்டுமா?
- அலைபேசியால் நன்மையா? தீமையா?
- பிறரைக் கேலி செய்தல் சரியா? தவறா?

ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.





பிரவீன், தீபா, விமல் மூவரும் விளையாடினர். அவர்களின் அம்மாவும் அப்பாவும் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர்: ஆகா! நேற்று நன்றாக மழை பெய்துள்ளது. மரங்களில் பழங்கள் இனிமேல் பழுக்கத் தொடங்கிவிடும் எனப் பேசிக்கொண்டே இருவரும் வெளியில் சென்றனர். அவர்கள் திரும்பி வந்ததும்,


விமல், மரங்களில் பழங்களைப் பறித்ததாகக் கூறினான்.

தீபா, கடைக்குச் சென்று பழங்கள் வாங்கி வந்ததாகக் கூறினாள்.

பிரவீன், விமல் மரத்தில் பறித்து வந்த பழங்களில் பழச்சாறு செய்தேன் என்று கூறினான்.

இவர்கள் மூவரில் ஒருவர்தான் உண்மையைக் கூறினார். அவர் யார்?

அ) விமல் ☐ ஆ) தீபா ☐ இ) பிரவீன் ☐






## குழந்தைகள் பொருள் புரிந்து படிப்பவராக...

- எழுத்து, சொல், சிறு தொடர் படித்தலில் தொடங்கி,
- பத்தியைப் படித்தல்
- படக்கதையைப் படித்தல்
- பாடச்சுருக்கத்தைப் படித்தல்
- முழுபாடப்பகுதியைப் படித்தல்

**ஆகியவற்றைப் பொருள்புரிந்து படிக்கும் நிலைக்குரிய திறன் பெற்றுள்ளனர்.**






5 உரையாடலைப் படித்து விடை தருக.



1. கவினுக்கு வயிற்றுவலி வந்ததற்குக் காரணம் என்ன?
   - அ) துரித உணவுகளை உண்டான். ○
   - ஆ) விடுமுறை எடுக்க நினைத்தான். ○
   - இ) சத்தான உணவுகளை உண்டான். ○



5.12 படித்துப் பார்ப்போம்

நண்பரைக் கண்டுபிடி!

முயல் வந்தது.

ஒட்டகம் வந்தது.


ஓணான் வந்தது.

ஓநாய் வந்தது.

ஒட்டகச்சிவிங்கி வந்தது.

அனைவரும் விளையாடினர்.



## குழந்தைகள் எழுதுதலில் மேம்பட்டவராக...

- வரியொற்றியும் பார்த்தும் எழுதுதலில் தொடங்கி,
- பாடல் / உரையாடலைத் தொடர்ந்து எழுதுவர்.
- குறிப்பிட்ட தலைப்புகளில் தன்னைப்பற்றி எழுதுவர்.
- சிந்தித்தும் பாடல் உருவாக்கியும் எழுதுவர்.
- படத்தைப் பார்த்துச் சொந்தக்கருத்தைப் பத்தியாக எழுதவும் ஆற்றல் பெறுகின்றனர்.




1. விளக்கக் காணொலி

# கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டவை...

## ஆசிரியர் கையேடு

- **கதை கேட்போம்** – பாடங்களைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்க்க
- **கலந்துரையாடல்** - குழந்தைகள், தம் அனுபவத்தை இணைத்து ஆசிரியருடன் உரையாட
- **என் மேடை! என் பேச்சு!** – மேடையில் பேசுதலை ஊக்குவிக்க
- **இது எங்கள் நேரம்** – நண்பருடன் சேர்ந்து பாடப்பகுதியில் தேடிப்படிக்க
- **மொழியோடு விளையாடு** – கற்ற பகுதியை விளையாட்டின் வழியாக நினைவுகூர
- **கேட்போமா! சொல்வோமா!** – பள்ளிச் செயல்பாட்டை வீட்டிலும் வீட்டில் கேட்ட அனுபவத்தைப் பள்ளியிலும் பகிர
- **இது நம் நேரம்** - தேவைக்கேற்ப ஆசிரியரே திட்டமிட்டுச் செயல்பட
- **சொல்லக்கேட்டு எழுதுவோம்** – பிழையின்றி எழுதிப்பழக





# கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டவை...

## பயிற்சி நூல்

- ◆ எழுத்து, சொல்லுக்கான பயிற்சிகள் – எழுத்துகள், சொற்களுக்கான வலுவூட்டல் பெற
- ◆ படித்துப் பார்ப்போம் - சுருக்கமான வடிவத்தில் முழுப் பாடப்பொருளையும் படிப்பதற்காக
- ◆ நாங்களே படிப்போம் – குறிப்பிட்ட பகுதியைப் படித்துப் பொருள்புரிந்து விடையளிக்க
- ◆ படக்கதையைப் படிப்போம் – படக்கதையைப் படித்துப் புரிந்துகொள்ள
- ◆ நாங்களே உருவாக்குவோம் – படத்தைப் பார்த்துச் சொந்த நடையில் எழுதுவதற்காக



2. கேட்பொலி – ஆசிரியரின் அனுபவப் பகிர்வு (டெலிகிராம்)



# முதல் பருவ அலகுகள்

| அ. எண் | தலைப்பு | அரும்பு (1-3) | வகுப்பு 2 | வகுப்பு 3 | கற்பித்தல் நாள்கள் | கூடுதல் நாள்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | விரும்பி விளையாடலாம் | கேட்டல், பேசுதல் | நினைவு கூர்தல்- பயிற்சிகள் | | 4 | 1 |
| 2 | விரலோடு விளையாடு | படித்தல் & எழுதுதல் முன் பழகு செயல்கள், | நினைவு கூர்தல்- பயிற்சிகள் | | 4 | 1 |
| 3 | எங்களால் முடியும் | அ, ஆ, இ, ஈ எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு, நா நெகிழ், நா பிறழ் பயிற்சி | | 5 | 1 |
| 4 | யார் அந்த நண்பர்? | உ, ஊ, எ, ஏ எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு | | 5 | 1 |
| | | | உறவுமுறை | எழுத்து வகை | | |
| 5 | கண்டுபிடி! கண்டுபிடி! | ஐ, ஒ, ஓ, ஔ எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு, புதிர் & விடுகதை | | 5 | 1 |
| 6 | பாட்டுக்குப் பாட்டு | க், ச், ட், த், ப், ற் எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு | | 5 | 1 |
| | | | பாதுகாப்பு | ஒரு சொல் பலபொருள் | | |
| 7 | எங்கள் தனித்திறமை | ங், ஞ், ண், ந், ம், ன் எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு | | 5 | 1 |
| | | | உரையாடல் | உணர்வுகள் | | |
| 8 | இறகு யாருடையது? | ய், ர், ல், வ், ழ், ள் எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு, பெயர்ச்சொல், வினைச்சொல் | | 5 | 1 |
| 9 | எங்கே போகலாம்? | அ வரிசை உயிர்மெய் எழுத்துகள் | பாடப்பயிற்சி, மொழி விளையாட்டு, மயங்கொலி | | 6 | 1 |
| 10 | இனியவை அறிவோம் | ஆ வரிசை உயிர்மெய் எழுத்துகள் | செய்யுள் | | 5 | 2 |

# முதல்பருவச் செயல்பாடுகள்

## ஆசிரியர் கையேடு

- வழிகாட்டும் தூரிகை
- கதை நேரம்
- பாடல் நேரம்
- விளையாட்டு நேரம்
- மேடை நேரம் -என் மேடை! என் பேச்சு!
- கற்றல் பேழை
- கலந்துரையாடல்
- இது எங்கள் நேரம்
- கேட்போமா! சொல்வோமா!
- சொல்லக்கேட்டு எழுதுவோம்
- இது நம் நேரம்
- பயணத்தின் பகிர்வு



## பயிற்சி நூல்

- எழுத்து, சொல்லுக்கான பயிற்சிகள்
- படித்துப் பார்ப்போம்
- படித்துப் பழகுவோம்
- நாங்களே படிப்போம்
- நாங்களே உருவாக்குவோம்
- படிப்பேன்; விடையளிப்பேன்
- சிந்திப்போம்; விடையளிப்போம்
- சிட்டுவும் நானும்
- விடைதேடவா! விளையாடவா!



slidesmania.com

# இந்த ஆண்டில் செயல்படுத்தப்படுபவை...

## பயிற்சி நூல்

◈ படிப்பேன்; விடையளிப்பேன் - பாடப்பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டதை வெளிப்படுத்த

◈ படித்துப் பழகுவோம் – அரும்புநிலைக் குழந்தைகள் சொற்கள் தொடங்கி, தொடர்களைப் படிக்கும் பயிற்சிபெற

◈ சிந்திப்போம்; விடையளிப்போம் – பொருள் புரிந்து படிக்கவும் சிந்தித்து விடையளிக்கவும்

◈ சிட்டுவும் நானும் – தன்னைப்பற்றிச் சிந்திக்கவும் அதை எழுத்து வடிவில் வெளிப்படுத்தவும்.


◈ விடைதேடவா! விளையாடவா! – கற்ற பகுதியிலேயே தேடிக் கண்டுபிடித்து ஆர்வத்துடன் விடையளிக்க.







## அரும்புநிலைக் குழந்தைகள் அதே நிலையில் நீடிக்காமல் அடுத்தடுத்த நிலைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா?

- அடிப்படைத்திறன்களைப் பெறுவதுடன் சொல்லுக்குள் சொல் படிக்கும், சிறு தொடர்களைப் படிக்கும் பயிற்சிகள் உள்ளன.
- நண்பர்களுடன் இணைந்து இச்செயல்பாடுகளைச் செய்யலாம்.
- எளிய நடைமுறை இலக்கணத்தை அறிந்து கொள்ள மொழிச்சிறகுகள் என்ற பகுதியில் உள்ள செயல்பாடுகளிலும் பங்கேற்கும்வகையில் கொடுக்கப்பட்டுள்ளது.




# குழந்தைகளைப் படைப்பாளர்களாக வெளிக்கொணருவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா?








**குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்காக**

- கதை நேரம்
- பாடல் நேரம்
- விளையாட்டு நேரம்
- மேடை நேரம்

**என ஒவ்வொரு திறனுக்கும் தனியே நேரம் வழங்கப்பட்டுள்ளன.**



# குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் செயல்பாடுகள்

- குழந்தைகள் பாடல் உருவாக்கிப் பாடுதல், எழுதுதல்
- கதைகளை உருவாக்கிக் கூறுதல்
- கற்பனைக் காட்சியை ஓவியமாக வரைதல்
- தாமே தொடர் உருவாக்குதல், படம் பார்த்து எழுதுதல்

போன்றவாறு ஆசிரியர் கையேட்டிலும் பயிற்சிநூலிலும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## பாடல் உருவாக்கிப் பாடுதல்



ஆர்வமூட்டல் – பாட்டுக்குப் பாட்டு

நாம் இப்போது ஒரு பாடல் பாடப்போகிறோம். ஆனால், அந்தப் பாடலை நாமேதான் உருவாக்கிப் பாடப்போகிறோம். நான் ஒரு வரி பாடினால், நீங்கள் ஒரு வரி பாடவேண்டும். நான் கேள்வியைப் பாடுவேன்; நீங்கள் பதிலைப் பாடவேண்டும் என்று குழந்தைகளிடம் கூறுங்கள்.

எ.கா.

ஆசிரியர் : யானைக்குட்டி யானைக்குட்டி எங்கே போறீங்க?

குழந்தைகள் : கரும்புத்தின்ன கரும்புத்தின்ன தோட்டத்துக்குப் போறேங்க

(அல்லது) கண்ணாமூச்சி கண்ணாமூச்சி விளையாடப் போறேங்க

இவைபோன்று குழந்தைகள் விரும்பியவாறு பாடலாம்.

ஆசிரியர் : குருவிக்குஞ்சு குருவிக்குஞ்சு எங்கே போறீங்க?

குழந்தைகள் : ஊரையெல்லாம் ஊரையெல்லாம் சுத்தப் போறேங்க

(அல்லது) நெல்மணியை நெல்மணியைத் தேடிப் போறேங்க

இவ்வாறு அடுத்தடுத்து பறவைகள், விலங்குகளின் பெயரை மாற்றி மாற்றிப் பாடிக்கேளுங்கள்.

குழந்தைகள் அமர்ந்துள்ள நிலையிலேயே இரண்டு குழுவாகப் பிரியுங்கள்.

நீங்கள் பாடும் ஒவ்வொரு வரிக்கும் இரு குழுவினருக்கும் வாய்ப்பு கொடுங்கள். இவ்வாறு சிறிதுநேரம் தொடர்ந்து பாடுங்கள்.

## பாடல் உருவாக்கி எழுதுதல்



6.14 நாங்களே உருவாக்குவோம்

கொஞ்சிப் பேசும் பச்சைக் கிளியே
என்னருகில் வா வா
உன்னைப் போலக் கொஞ்சிப் பேச
எனக்குச் சொல்லித் தா தா

பாட்டுப்பாடும் காட்டுக்குயிலே
என்னருகில் வா வா
உன்னைப் போலப் பாட்டுப்பாட
எனக்குச் சொல்லித் தா தா

நடனமாடும் நல்ல மயிலே

துள்ளிஓடும்

## வரைதல்



ஆர்வமூட்டல் – வரையலாம் வாங்க!

- கீழ்க்காணும் எளிய படங்களைக் கரும்பலகையின் மேல்பகுதியில் வரையுங்கள்.
- குழந்தைகளை இரு குழுவாகப் பிரியுங்கள்.
- வரையப்பட்டுள்ள படங்களின்கீழ், கரும்பலகையை இரண்டாகப் பிரித்து குழு 1, குழு 2 என்று எழுதுங்கள்.
- இரு குழுவினரும் நீங்கள் தொடங்குங்கள் என்று கூறியவுடன், கரும்பலகையில் உள்ள படங்களைப் பயன்படுத்தி ஒரு காடு எப்படி இருக்கும் என்பதைக் கற்பனைசெய்து வரையவேண்டும்.
- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இரண்டு அல்லது மூன்றுபேர் இணைந்து வரையலாம். மற்றவர்கள் அவர்களுக்கு உதவி செய்யலாம்.
- கொடுக்கப்பட்ட நேரத்துக்குள் அனைத்துப் படங்களையும் பயன்படுத்தி வரைந்துள்ள குழுவினரைப் பாராட்டுங்கள். இரு குழுவினரின் கற்பனை வளத்தையும் எடுத்துக்கூறிப் பாராட்டுங்கள். கரும்பலகையில் நீங்கள் வரைந்தது தவிர, வேறு எவற்றையேனும் வரைந்திருந்தால் அவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லியும் பாராட்டுங்கள்.

## நாடகமாக நடித்தல்



ஆர்வமூட்டல் – பாம்... பாம்...

குழந்தைகளுக்குக் கீழ்க்காணும் காட்சியினை விளக்கிக்கூறி நடிக்கச் செய்யுங்கள்.


காட்சி 1: ஒரு பேருந்தில் குழந்தைகள் ஓட்டுநர், நடத்துநர், பயணிகள் போல நடித்தல்.
காட்சி 2: ஒரு நிறுத்தத்தில் வயதான ஒருவர் தடியூன்றிக்கொண்டு பேருந்தில் ஏறி இடமில்லாமல் நிற்றல்; குழந்தைகளில் ஒருவர் எழுந்து இடமளித்தல்.
காட்சி 3: மாற்றுத்திறனாளர் ஒருவர் ஏறுதல்; வேறொரு குழந்தை எழுந்து இடமளித்தல்.
காட்சி 4: கைக்குழந்தையுடன் ஒருவர் ஏறுதல்; மற்றொரு குழந்தை இடமளித்தல்.
காட்சி 5: காலில்/ கையில் அடிபட்டு, கட்டுப்போட்டவர் ஒருவர் ஏறுதல்; ஒரு குழந்தை எழுந்து இடமளித்தல்.
காட்சி 6: பையைத் தூக்கிக்கொண்டு நிற்கமுடியாமல், நிற்பவரிடமிருந்து பையை வாங்கிக்கொள்ளுதல்.


இவ்வாறு உங்கள் கற்பனைக்கு ஏற்ப காட்சிகளை உருவாக்கியும் நடிக்கச் செய்யலாம். குழந்தைகள் நடித்தபிறகு, கைதட்டிப் பாராட்டி மகிழுங்கள்.


# குழந்தைகள் தாமே தேடிக்கண்டுபிடிக்கும் வாய்ப்புகள் உள்ளனவா?

## விடைதேடவா! விளையாடவா!

- மூன்றாம் வகுப்புக் குழந்தைகள், தாங்களாகவே சிந்தித்தோ அதே அலகில் உள்ள பயிற்சிகளில் ஆர்வத்துடன் தேடிக் கண்டுபிடித்தோ விடையளிக்கும்வகையில் அமைந்துள்ளது.
- இச்செயல்பாட்டிற்கான விடைகளைத் தாங்கள் கற்ற அந்த அலகில் உள்ள பயிற்சிகளிலேயே தேடிக்கண்டுபிடிப்பர்.
- படப் புதிர்களுக்கான பதில்களைத் தேடிக் கண்டுபிடிப்பர்.



# குழந்தைகளின் மேடைப் பேச்சாற்றலைச் செழுமைப்படுத்த வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளதா?

## மேடை நேரம்

◈ குழந்தைகள் மேடையில் பேசுவதைச் செழுமைப்படுத்துவதற்காக, ஆசிரியரும் பங்கேற்றுப் பேசும் புது உத்தி என்மேடை! என் பேச்சு! பகுதியில் அளிக்கப்பட்டுள்ளது.



7. மேடை நேரம்

குழந்தைகள் நண்பர்களோடு பேசி மகிழ்ந்த கதை நிகழ்வுகளைக் கூறச்செய்யுங்கள்.

என் நண்பர், என் செல்லம், என் வீடு, ...

போன்றவற்றில் குழந்தைகள் விரும்பும் தலைப்பில் பேசச் செய்யுங்கள்.

முதல் வகுப்புக் குழந்தைகளைப் பயிற்சி எண் 1.1 பார்த்துப் பேச வழிகாட்டுங்கள்.

வழிகாட்டும் தூரிகை

- என் மேடை! என் பேச்சு! – என்பது குழந்தைகள் பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கான பகுதி.
- ஒவ்வொரு நாளும் ஓரிரு குழந்தைகளைக் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 1–2 நிமிடம்வரை சுழற்சி முறையில் பேசச் செய்யவேண்டும்.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் வாய்ப்பளித்து, பேசத் தயங்கும் குழந்தைகளையும் ஊக்கப்படுத்தி முன்வரச்செய்து ஓரிரு தொடராவது பேசவைத்தல் வேண்டும்.

குழந்தைகள் பேசியவுடன் பாராட்டுகளை மட்டும் தெரிவியுங்கள். குழந்தைகளின் பேச்சைச் செழுமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளைத் தரவேண்டாம். அதே தலைப்பில் நீங்களும் மேடையில் பேசுங்கள். தெளிவாகப் பேசுதல், பிறமொழி கலக்காமல் தமிழில் பேசுதல், குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல் போன்ற மேடையில் பேசுவதற்கான நடையில் பேசுங்கள். தொடக்கநிலையில் உள்ள குழந்தைகள் நாம் சொல்வதைக் கேட்டுக் கற்றுக்கொள்வதைவிட நம்மைப் பார்த்து நன்கு கற்றுக்கொள்வர். நாம் பேசுவதைத் தொடர்ந்து உற்றுநோக்கினால் நாளடைவில் அவர்களின் மேடைப் பேச்சும் செழுமையாவதைக் காணலாம்.





# வினா விடை நேரம்



என் மேடை! என் பேச்சு! பகுதியில் ஆசிரியரும் பங்கேற்றுப் பேசுவது குழந்தைகளுக்கு எவ்வகையில் உதவுகிறது?



அ) வெற்றியாளரைக் கண்டறிய உதவுகிறது

ஆ) குழந்தைகளின் பேச்சுத்திறனை செம்மைப்படுத்துகிறது

இ) ஆசிரியரின் கருத்தை அறிந்துகொள்ள முடிகிறது

முதல்வகுப்புக் குழந்தைகள் தங்கள் பெயரையும் நண்பர்களின் பெயர்களையும் அடையாளம்கண்டு படிக்க விரும்புவர். அதற்கான வழிவகை உள்ளதா?

## என் பெயரட்டை

- குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த சொல் அவர்களின் பெயர்தான்.
- எழுத்தறிமுகம் செய்யப்படாத நிலையிலும் நான்கு வாரங்களில் தங்கள் பெயரையும் நண்பர்களின் பெயரையும் ஆர்வத்துடன் படித்துப் பழகுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

### முதல் வாரம்

- நாள்தோறும் அட்டையை நீங்களே எடுத்துப் படித்துக்காட்டி அவர்களின் சட்டையில் பொருத்திக் கொடுங்கள். காலையில் கொடுத்து மாலையில் வாங்கி வைத்துவிடுங்கள்.
- நாள்தோறும் வரைபடத்தாளில் வரிசையாக எழுதிய பெயர்களைத் தொட்டுக்காட்டி வருகையைப் பதிவுசெய்யுங்கள். வருகையைப் பதிவு செய்யும்போது குழந்தைகள் உற்றுநோக்குவர். தங்கள் பெயர்களைப் பார்த்தவுடன் எளிதாக அடையாளம் காண்பர். நண்பர்களின் பெயர்களையும் அடையாளம்காண முயற்சிசெய்வர்.



### நான்காம் வாரம்

- மேசைமீது குழந்தைகளின் பெயரட்டைகளைப் பரப்பிவைத்து எத்தனை பெயர்களைக் குழந்தைகளே கண்டுபிடிக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம் அல்லது உங்களுக்குப் பதிலாகக் குழந்தைகள் யாரையேனும் வருகைப்பதிவு செய்யவைத்து எத்தனை பெயர்களை அக்குழந்தையால் அடையாளம் காணமுடிகிறது என்பதைக் கண்டறியலாம்.



## 3. விளக்கக் காணொலி

# குழந்தைகள் முழுப் பாடப்பகுதியையும் படிப்பதற்கான வாய்ப்பு உள்ளதா?


## எங்கள் சொற்கள் – இது எங்கள் நேரம்

- ஒரு தகவலை ஆர்வத்துடன் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு பாடப்பகுதியைப் படித்துப்பார்க்கும் வகையில் இச்செயல்பாடு அமைக்கப்பட்டுள்ளது.

### 2. இது எங்கள் நேரம்

**வழிகாட்டும் தூரிகை**

மொட்டு, மலர்நிலைக் குழந்தைகள் இது எங்கள் நேரம் செயல்பாட்டைச் செய்யும் அதேநேரம், அரும்புநிலைக் குழந்தைகளுக்கு எழுத்து அறிவோம் செயல்பாட்டைச் செயல்படுத்துங்கள்.



எங்கள் சொற்கள் பகுதியில் உள்ள சொற்களைப் பாடநூலில் தேடிக்கண்டுபிடித்து அச்சொற்கள் அமைந்த தொடர்களை அடிக்கோடிட்டு நண்பர்களுடன் படிக்கச் செய்யுங்கள்.

**இரண்டாம் வகுப்பு**

- புது நண்பர் வந்தவுடன் அனைவரும் என்ன செய்தனர்? என்பதைக் கண்டுபிடியுங்கள்.

**மூன்றாம் வகுப்பு**

- ஒரே முதல் எழுத்தில் தொடங்கும் சொற்கள் உள்ள தொடர்கள்
- குறில் எழுத்தில் தொடங்கும் ஒரு தொடர் அதே குறிலுக்குரிய நெடில் எழுத்தில் தொடங்கும் ஒரு தொடர்.
- இருசொற்களிலும் உயிர் எழுத்துகளை முதல் எழுத்தாகக் கொண்ட தொடர் எவையெனக் கண்டுபிடியுங்கள்.


இதுபோன்ற வினாக்களைக் கேட்டுப் பாடநூலைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டலாம்.

# குழந்தைகள் சிந்தித்து விடையளிக்கும் பயிற்சிகள் உள்ளனவா?

## சிந்திப்போம்; விடையளிப்போம்

◈ குழந்தைகளின் சிந்தனையை முன்னகர்த்திச் செல்லும் வகையில் படங்களை உற்றுநோக்கி, சிறு தொடர்கள்/ பத்திகளைப் படித்துப் புரிந்துகொள்ளும்படி கற்றல் விளைவுகளின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது.






3 தொடரைப் படித்து விடை தருக.

உதயா நிறைய கதைகள் படிப்பாள்.

உதயா, கதைகளைத் தெரிந்து கொள்ள உதவியது எது?

அ) வரைபடப் புத்தகம் ஆ) கதைப்புத்தகம் இ) பாடல் புத்தகம்


6.16 சிந்திப்போம்; விடையளிப்போம்

சின்னுவுக்கு இளநீர் குடிக்கலாம் எனத் தோன்றியது. தன் அப்பாவிடம் கூறிவிட்டுக் கடைக்குச் சென்றான். கடையில் இளநீர் குடிக்கும்போது அவன் நண்பன் கரண் அங்கே வந்தான். அவனுக்கும் ஒரு இளநீர் வாங்கிக் கொடுத்தான். மகிழ்ச்சியுடன் விளையாடச் சென்றனர்.

சின்னு யாருக்காக இளநீர் கடைக்குச் சென்றான்?

அ) அப்பாவிற்காகச் சென்றான்.

ஆ) நண்பனுக்காகச் சென்றான்.


இ) தனக்காகச் சென்றான்.

# சொந்தமாக எழுதும் ஆற்றலை வளர்ப்பதற்கான பகுதி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது?

## நாங்களே உருவாக்குவோம்

- தன் அனுபவத்தில் சொற்களாக விடையளித்தல்
- கொடுக்கப்பட்ட குறிப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடரமைத்தல்
- தொடர்களை நீட்டித்து எழுதுதல்
- படத்தைப் பார்த்துச் சொந்தக் கருத்தைப் பத்தியாக எழுதுதல்

போன்ற வகையில் சொந்தமாக உருவாக்கி எழுதுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.






# குழந்தைகள் தங்களைப் பற்றிச் சிந்திக்கவும் அதை எழுத்து வடிவில் வெளிப்படுத்தவும் வாய்ப்பு உள்ளதா?

## சிட்டுவும் நானும்

- குறிப்பிட்ட தலைப்பில் தன்னைப்பற்றித் தொடர்களாக அவரவர் நிலைக்கேற்ப எழுதி வெளிப்படுத்தும் வகையிலான பயிற்சிகள் உள்ளன.
- மூன்றாம் வகுப்புக் குழந்தைகளுக்கான செயல்பாடு.
- நண்பர்களுடன் இணைந்தோ சிறுகுழுவாகவோ மேற்கொள்ளும் வகையில் உள்ளது.



# வினா விடை நேரம்



சிட்டுவும் நானும் என்னும் செயல்பாடு குழந்தைகளிடம் எந்தத் திறனை வளர்க்கிறது?

அ) பார்த்து எழுதுதல்

ஆ) படம் பார்த்துக் கதை எழுதுதல்

இ) தன்னைப்பற்றிச் சிந்தித்து எழுதுதல்



# தேநீர் இடைவேளை

11.30 – 11.45




# அமர்வு 2

11.45 – 1.00



# எண்ணும் எழுத்தும் ஆசிரியர்...




ஆராய்ச்சியாளராக உருமாறி உயிரோட்டமான வகுப்பறையை உருவாக்குபவராக இருக்கிறார்.

# எண்ணும் எழுத்தும் மூன்றாம் ஆண்டில்...


இவை தவிர, 2024-25ஆம் கல்வியாண்டின் முதல் பருவத்தில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும்விதமாக,



வகுப்பறை
மேலாண்மைக்கான
வழிகாட்டுதல்




செயல்பாட்டை
உற்றுநோக்கி ஆராய்வதற்கான
வழிகாட்டுதலை அளிக்கும் பகுதி




வகுப்பறைச் செயல்பாடுகளைத்
தாமே மதிப்பீடு செய்யவும் பதிவு செய்யவும்
மேம்படுத்தவும் பகிரவும் உதவும் பகுதி

**4. விளக்கக் காணொலி**

## தனி வகுப்பைக் கையாளும் ஆசிரியர் தன் வகுப்புக்குரிய செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ள முழு அலகையும் படிக்க வேண்டுமா?


### வழிகாட்டும் தூரிகை

- தனிவகுப்பு, பல்வகுப்பிற்கு எந்தெந்த செயல்பாட்டைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்.
- ஒரு நிலைக் குழந்தைகளுக்கு கற்பிக்கும்போது, பிறநிலைக் குழந்தைகளுக்கான வழிகாட்டல்.
- செயல்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான வழிகாட்டல்

போன்ற வகுப்பறை மேலாண்மைக்கான வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வழிகாட்டும் தூரிகை

அரும்பு, மொட்டு, மலர்நிலைச் செயல்பாடுகளை அந்தந்த நிலைக் குழந்தைகள் செய்யும்போது பிற குழந்தைகளைப் பார்வையாளர்களாக இருக்கச் செய்யுங்கள்.



# ஆசிரியர், ஆராய்ச்சியாளராகச் செயல்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா?

## கற்றல் பேழை

- ஒரு செயல்பாட்டை மேற்கொள்ள எப்படித் திட்டமிடலாம்?
- திட்டமிட்டது போல் அந்தச் செயல்பாடு நடந்ததா?
- எங்கெல்லாம் வெற்றிபெற்றது?
- எங்கெல்லாம் தோல்விக்கு வாய்ப்பு இருக்கிறது?
- அதையும் எப்படி வெற்றி வாய்ப்பாக மாற்றலாம்?
- அனைத்துக் குழந்தைகளும் ஆர்வத்தோடு ஈடுபட்டார்களா?
- ஒருவேளை இல்லையெனில் அவர்களின் ஆர்வத்தை என்னென்ன உத்திகளைப் பயன்படுத்தித் தூண்டலாம்?

இவைபோன்று உற்றுநோக்கி ஆராய்வதற்கான வழிகாட்டுதலை அளிக்கும் பகுதியாக அமைந்துள்ளது.




குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது அவர்களின் பெயர்தான். நான் உன் பெயரை எழுதட்டுமா? என்று கேட்கும்போது அவர்களின் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமே...! இந்த ஆர்வத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பார்ப்போம். இச்செயல்பாடு செய்வதன் மூலம் எழுத்து அறிமுகமே இல்லாத குழந்தைகளும் தன் பெயரை மட்டுமல்லாமல் தன் நண்பர்களின் பெயர்களையும் நான்கு வாரங்களுக்குள் நன்கு அடையாளம் கண்டுகொள்வர்.

# பயணத்தின் பகிர்வு


**ஆசிரியர் தங்கள் வகுப்பறைச் சூழலில் செயல்பாடுகளை நிகழ்த்தும்போது,**

- கற்றல் பேழையின் ஆராய்ச்சி முடிவுகளைப் பதிவு செய்வதற்கான பகுதி
- செயல்பாட்டின் தன்மை
- குழந்தைகளின் ஆர்வம், ஈடுபாடு, முன்னேற்றம்

போன்ற வகையில் வகுப்பறைச் செயல்பாடுகளைத் தாமே மதிப்பீடு செய்யவும் பதிவு செய்யவும் மேம்படுத்தவும் பகிரவும் உதவும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது.


பயணத்தின் பகிர்வு...

இது உங்களின் கற்றல் கற்பித்தலுக்கான குறிப்பேட்டுப் பகுதி. இந்த அலகில் மிகச் சவாலாக, மிக எளிமையாக, மிகக்கடினமாக, குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய, முழுமையான கற்றல் விளைவை ஏற்படுத்திய, முழுமையான கற்றல் விளைவை ஏற்படுத்தாத செயல்பாடுகள் எவையேனும் இருப்பின் இப்பகுதியில் குறித்து வையுங்கள். ஒருசில செயல்பாடுகள் எல்லா அலகிலும் தொடர்ந்து வரக்கூடியன. அவைபோன்ற செயல்பாடுகளின் விளைவையும் குழந்தைகளின் முன்னேற்றத்தையும் உற்றுநோக்கி, இப்பகுதியில் குறித்து வைக்கலாம்.



# வினாவிடை நேரம்



கற்றல் பேழை உங்கள் வகுப்பறைக்கு எவ்வாறு வழிகாட்டுகிறது?

அ) தனிவகுப்பைக் கையாளுவதற்கு

ஆ) ஒரு செயல்பாட்டை ஆய்வு நோக்கில் உற்றுநோக்குவதற்கு

இ) உங்கள் வகுப்பிற்கான செயல்பாட்டை அறிந்து கொள்வதற்கு




# வகுப்பறைச் சூழலுக்கேற்ப ஆசிரியரே செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் வாய்ப்பு உள்ளதா?

◆ வகுப்பறைச் சூழல், குழந்தைகளின் ஆர்வத்திற்கேற்ப செயல்பாட்டை மேற்கொள்ளும் வகையில் பரிந்துரைக்கும் செயல்பாடுகள்

◆ குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்து எழுத்தறிமுகம் செய்தல் போன்ற வாய்ப்புகள் உள்ளன.

## பரிந்துரைக்கும் செயல்பாடு




### பரிந்துரைக்கும் செயல்பாடு – அடுத்தது என்ன?

பரிந்துரைக்கும் செயல்பாட்டைக் கூடுதலாகவோ அல்லது மேலுள்ள செயல்பாட்டுக்கு மாற்றாகவோ பயன்படுத்தலாம்.

- கரும்பலகையில் படத்தினை வரையுங்கள். அடுத்த படம் எப்படி இருக்கலாம்? என்று குழந்தைகளிடம் கேளுங்கள். அவரவர் குறிப்பேட்டில் வரையச் செய்யுங்கள்.
- முதல் மூன்று படங்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்று உற்றுநோக்கச் செய்யுங்கள். முதல் படம் மேல்நோக்கி நேராக அமைந்திருப்பதைக் கூறி, அடுத்தபடம் எவ்வாறு அமைந்துள்ளது? என்பதைக் குழந்தைகளைக் கூறச்செய்யுங்கள். இடதுபக்கம் திரும்பியுள்ளதைக் கூறுவார்கள். மூன்றாவது படம் இன்னும் சுழன்று கீழ்நோக்கி அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, அடுத்த படம் அதே திசையில் இன்னும் சுழன்றால் எப்படி இருக்கும்? என்று கேளுங்கள். குழந்தைகள் பதிலைக் கண்டுபிடித்துவிடுவர்.
- இதுபோன்ற விளையாட்டுகளில் கொடுக்கப்பட்டுள்ள படங்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறு சீரான மாற்றத்துடன் அமைந்துள்ளன என்று உற்றுநோக்கிக் கண்டுபிடித்துவிட்டால் அடுத்த படம் எப்படி இருக்கும் என்பதைக் கூறிவிடலாம்.
- இப்படங்களைக் கரும்பலகையில் வண்ணச் சுண்ணக்கட்டிகொண்டு வரைந்து ஒவ்வொன்றிலும் அடுத்த படம் என்ன? என்பதைக் கண்டுபிடித்துக் குழந்தைகளை வரையச் செய்யுங்கள்.

## எழுத்து அறிமுகத்திற்கான வாய்ப்புகள்



கீழ்க்காணும் வகையிலும் எழுத்துகளை அறிமுகம் செய்யலாம்.

கப்பலின் கதவு கருப்பு என்று கரும்பலகையில் எழுதிப் படித்துக்காட்டுங்கள். மூன்று சொற்களிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அது என்னவென்று கண்டுபிடிக்குமாறு குழந்தைகளிடம் கூறுங்கள். சொல்லிப்பார்த்து மூன்று சொற்களும் ஒரே ஒலிப்பில் தொடங்குவதையோ கரும்பலகையைப் பார்த்து மூன்றும் ஒரே எழுத்தில் தொடங்குவதையோ கண்டுபிடிக்க முயற்சி செய்வர். அவ்வாறு இல்லையெனில் குறிப்புகள் கொடுத்து வழிகாட்டுங்கள். கண்டறிந்த குழந்தைகளைப் பாராட்டுங்கள்.

அதைப்போல க ஒலிப்பில் தொடங்கும் இரண்டு அல்லது மூன்று சொற்களை இணைத்துக் கூறமுடியுமா? என்று கேளுங்கள்.

குழந்தைகள் முயற்சி செய்யட்டும். அதற்கு உரிய நேரம் அளியுங்கள்.

கரும்பைக் கடித்தேன் என்று குழந்தைகள் கூறலாம்.

கரடி கரும்பு……… இதற்கு அடுத்த சொல்லையும் க–வில் தொடங்கி தொடராக்க முடிகிறதா எனக்கூறுங்கள். கரடி கரும்பை… போன்ற குறிப்புகளை அளித்துத் தொடர்களை உருவாக்க உதவுங்கள். (கரடி கரும்பைக் கடித்தது)


க எழுத்தை வட்டமிட்டு அறிமுகம் செய்யுங்கள்.

இதைப்போலவே கீழ்க்காணும் எழுத்துகளையும் அறிமுகம் செய்யுங்கள்.

சட்டையில் சறுக்கியது – ச

தவளை தட்டில் தத்தியது; தடுக்கியது; தடுமாறியது – த

# எண்ணும் எழுத்தும் வகுப்பறை…




ஒருங்கிணைந்த படைப்பாற்றலின் கருவறையாகத் திகழ்கிறது.


# பல்வேறு களங்களாக விளங்கும் வகுப்பறை



பாடும் களமாக



படித்தல் களமாக




பேசும் களமாக



கதை கூறும் களமாக



நடித்தல் களமாக




விளையாடும் களமாக

# பல்வேறு களங்களாக விளங்கும் வகுப்பறை











படைப்பாற்றலின் கருவறையாக

## 5. காணொலி விளக்கம்



# படிப்போம்; பகிர்வோம்







குழு 1




குழு 2




குழு 3




குழு 4




குழு 5

- கொடுக்கப்பட்ட செயல்பாடு எந்த வகுப்பு, எந்த நிலைக்கு உரியது?
- நீங்கள் முதல் வகுப்பு ஆசிரியர் எனில், இப்பகுதியில் எச்செயல்பாட்டை மேற்கொள்வீர்கள்?
- நீங்கள் இரண்டாம் வகுப்பு ஆசிரியர் எனில், இப்பகுதியில் எச்செயல்பாட்டை மேற்கொள்வீர்கள்?
- மூன்றாம் வகுப்பு ஆசிரியர் எனில், இப்பகுதியில் எச்செயல்பாட்டை மேற்கொள்வீர்கள்?

slidesmania.com

# படிப்போம்; பகிர்வோம்

**குழு 1**

நாங்களே உருவாக்குவோம் **வகுப்பு** - 2, 3 **நிலை** - மொட்டு, மலர்

விதவிதமாக எழுதிப் பழகுவோம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு

**முதல் வகுப்பு** - விதவிதமாக எழுதிப் பழகுவோம்

**இரண்டாம் வகுப்பு** - நாங்களே உருவாக்குவோம், விதவிதமாக எழுதிப் பழகுவோம்

**மூன்றாம் வகுப்பு** -நாங்களே உருவாக்குவோம், விதவிதமாக எழுதிப் பழகுவோம்

**குழு 2**

பாடல் நேரம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு, மொட்டு, மலர்

விதவிதமாக எழுதிப் பழகுவோம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு

சொல்லக்கேட்டு எழுதுவோம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு, மொட்டு, மலர்

**முதல் வகுப்பு** - பாடல் நேரம், விதவிதமாக எழுதிப் பழகுவோம், சொல்லக்கேட்டு எழுதுவோம் **இரண்டாம் வகுப்பு** - பாடல் நேரம் விதவிதமாக எழுதிப் பழகுவோம் சொல்லக்கேட்டு எழுதுவோம் **மூன்றாம் வகுப்பு** -பாடல் நேரம் விதவிதமாக எழுதிப் பழகுவோம் சொல்லக்கேட்டு எழுதுவோம்

slidesmania.com

# படிப்போம்; பகிர்வோம்

## குழு 3

விளையாட்டு நேரம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு, மொட்டு, மலர்

**முதல் வகுப்பு** – விளையாட்டு நேரம் (புதிர்க்கதை)

**இரண்டாம் வகுப்பு** - விளையாட்டு நேரம் **அரும்பு** (புதிர்க்கதை) மொட்டு (மாட்டுவண்டி)

**மூன்றாம் வகுப்பு** - விளையாட்டு நேரம் **அரும்பு** (புதிர்க்கதை) **மொட்டு, மலர்** (மாட்டுவண்டி)

## குழு 4

கதை நேரம் (ஆர்வமூட்டல்) வகுப்பு - 1, 2, 3

கதை நேரம் (கதை கேட்போம்) வகுப்பு – 3

**முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு** - ஆர்வமூட்டல்

**மூன்றாம் வகுப்பு** – ஆர்வமூட்டல், கதை கேட்போம்

## குழு 5

இது எங்கள் நேரம் **வகுப்பு** - 2, 3 **நிலை** - மொட்டு, மலர்

எழுத்து அறிவோம் **வகுப்பு** - 1, 2, 3 **நிலை** - அரும்பு, மொட்டு, மலர்

**முதல் வகுப்பு** - எழுத்து அறிவோம்

**இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு** - இது எங்கள் நேரம் எழுத்து அறிவோம்

slidesmania.com

# அலகு அமைப்பு

கதை நேரம்
- ஆர்வமூட்டல்
- கதை கேட்போம்

இது எங்கள் நேரம்
- எழுத்து அறிவோம்

நாங்களே உருவாக்குவோம்
- விதவிதமாக எழுதிப் பழகுவோம்

பாடல் நேரம்
- சொல்லக்கேட்டு எழுதுதல்

விளையாட்டு நேரம்
- மொழிச்சிறகுகள்

slidesmania.com

1

**குழந்தைகள்**

படைப்பாளர்கள்

2

**ஆசிரியர்**

ஆராய்ச்சியாளர்

3

**வகுப்பறை**

படைப்பாற்றலின் கருவறை

# நன்றி

